# செப்டம்பர் – 17 – திங்கள்

புனித ரொபர்ட் பெர்லாமின்

நானோ ஏழை: எளியவன்: என் தலைவர் என்மீது அக்கறை கொண்டுள்ளார்: திபா. 40:17

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 11 : 17 – 26, 33

என் சகோதர சகோதரிகளே, இவ்வறிவுரைகளைக் கொடுக்கும் நான் உங்களைப் பாராட்டமாட்டேன். ஏனெனில் நீங்கள் ஒன்றுகூடி வரும்போது நன்மையைவிடத் தீமையே மிகுதியாக விளைகிறது. முதலாவது, நீங்கள் சபையாகக் கூடிவரும்போது உங்களிடையே பிளவுகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஓரளவு அதை நம்புகிறேன். உங்களிடையே கட்சிகள் இருக்கத்தான் செய்யும். அப்போதுதான் உங்களுள் தகுதியுள்ளவர்கள் யாரென வெளிப்படும். இந்நிலையில் நீங்கள் ஒன்றாகக் கூடிவந்து உண்பது ஆண்டவரின் திருவிருந்து அல்ல. ஏனெனில் நீங்கள் உண்ணும் நேரத்தில், ஒவ்வொருவரும் தாம் கொண்டுவந்த உணவை மற்றவர்களுக்கு முந்தியே உண்டுவிடுகிறீர்கள். இதனால் சிலர் பசியாய் இருக்க, வேறு சிலர் குடிவெறியில் இருக்கிறார்கள். உண்பதற்கும் குடிப்பதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? அல்லது கடவுளின் திருச்சபையை இழிவுப்படுத்தி, இல்லாதவர் களை வெட்கப்படுத்துகிறீர்களா? என்ன சொல்வது? உங்களைப் பாராட்டுவதா? இதில் உங்களைப் பாராட்டமாட்டேன். ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றிசெலுத்தி, அதைப்பிட்டு, ”இது உங்களுக்கான என் உடல். என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்” என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, ”இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்” என்றார். ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள். எனவே என் சகோதர சகோதரிகளே, உண்பதற்காக நீங்கள் ஒன்று கூடிவரும்போது ஒருவர் மற்றவருக்காகக் காத்திருங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்.

## நற்செய்தி : லூக்கா 7 : 1 – 10

அக்காலத்தில் இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றார். அங்கே நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளர் ஒருவர் நோயுற்றுச் சாகும் தறுவாயிலிருந்தார். அவர்மீது தலைவர் மதிப்பு வைத்திருந்தார். அவர் இயேசுவைப் பற்றிக்கேள்விப்பட்டு யூதரின் மூப்பர்களை அவரிடம் அனுப்பித் தம்பணியாளரைக் காப்பாற்ற வருமாறு வேண்டினார். அவர்கள் இயேசுவிடம் வந்து, ”நீர் இவ்வுதவி செய்வதற்கு அவர் தகுதியுள்ளவரே. அவர் நம்மக்கள் மீது அன்புள்ளவர் எங்களுக்கு ஒருதொழுகைக்கூடமும் கட்டித் தந்திருக்கிறார்” என்றுசொல்லி அவரை ஆர்வமாய் அழைத்தார்கள். இயேசு அவர்களோடு சென்றார். வீட்டுக்குச் சற்றுத்தொலையில் வந்துகொண்டிருந்தபோதே நூற்றுவர் தலைவர் தம்நண்பர்கள் சிலரை அனுப்பிப் பின்வருமாறு கூறச்சொன்னர் ”ஐயா, உமக்குத் தொந்தரவு வேண்டாம் நீர் என்வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். உம்மிடம் வரவும் என்னைத் தகுதியுள் ளவனாக நான் கருதவில்லை. ஆனால் ஒருவார்த்தை சொல்லும் என் ஊழியர் நலமடைவார். நான் அதிகாரத்துக்கு உட்பட்டவன். என் அதிகாரத்துக்கு உட்பட்ட படைவீரரும் உள்ளனர். நான் ஒருவரிடம் ”செல்க” என்றால் அவர் செல்கிறார் வேறு ஒருவரிடம் ”வருக” என்றால் அவர் வருகிறார். என் பணியாளரைப் பார்த்து ”இதைச் செய்க” என்றால் அவர் செய்கிறார்.” இவற்றைக்கேட்ட இயேசு அவரைக்குறித்து வியப்புற்றார். தம்மைப் பின்தொடரும் மக்கள்கூட்டத்தினரைத் திரும்பிப்பார்த்து, ”இஸ்ரயேலரிடத்திலும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை என உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அப்பணியாளர் நலமுற்றிருப்பதைக் கண்டார்கள்.

**தியானம்:** இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் இறைவார்த்தையை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதை இறைவன் விரும்புகின்றார். இவ்வாறு போதிக்கும் பணி என்பது இலகுவான காரியமல்ல, மாறாக பல சவால்களை சந்திக்கும் பணியாகும். இவை மனிதனுடைய ஞானத்தனால் செய்யப்படுபவை அல்ல மாறாக ஆவியானவரின் ஞானத்தினால் செயற்படும் ஒன்றாகும். இவ்வாறான பணியினை புரியும் பொழுது துன்பமான, துயரமான சம்பவங்கள் ஏற்படத்தான் செய்யும் இருப்பினும் யாவற்றையும் இறைவனுக்கு ஏற்றவகையில் செய்வோம், யாவற்றையும் இறைவன் பார்த்துக் கொள்வார் என்று நம்பிக்கை கொள்வோம். நற்செய்தி வாசகத்திலும் கூட நூற்றுவத் தலைவரின் ஊழியக்காரன் சாகும் தருவாயில் இருக்கும் பொழுது, இயேசு ஒருவரால்தான் நோயிலிருந்து விடுதலை தர முடியும் என்று விசுவசித்தார். இருப்பினும்தான் பாவியாக இருக்கின்றேன் அவர் எனது உள்ளமாகிய இல்லத்தில் தங்குவதற்கு தகுதியற்றவனாக இருக்கின்றேனே என்பதை உணர்ந்தவராக “இயேசுவே நிர் என் இல்லத்தில் வர நான் தகுதியற்றவன் ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் எனது ஊழியக்காரன் நலமடைவான்” என்கிறார். யாரெல்லாம் தன்னிலே நம்பிக்கை கொண்டு தன்னிடம் வருின்றார்களோ அவர்களுக்கு விடுதலை நிற்சயம் என்கின்றார். எனவே எமது பாவங்களின் நிமித்தம் உடல் நோயால், மனநோயால் இவ்வாறான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நாங்கள் நோயிலிருந்து விடுபட எமது பாவங்களுககாக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம்.